www.padippakam.com



# மதுரைக்கு வந்த ரோமாபுரி பிராமணர்கள்

35

யாழ்ப்பாணத்தில் தமது ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாதவாறு தடுப்பதற்காக ஒலிவேரா கையாண்ட கிறிஸ்தவ மதமாற்ற யுக்தி பெரும் பலனளித்தது. யாழ்ப்பாணப் பிரதானிகள், தமக்கு தமது இந்து மத நம்பிக்கையில் இருந்து விலகுவதற்கு விருப்பம் இல்லாவிட்டாலும், ஒலிவேராவினது கோபத்துக்கு ஆளாகமல் இருப்பதற்காக, 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' கணக்கில் ஒப்புக்குத் தாங்களும் கிறிஸ்தவர்களாக நடித்து பதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறு அவர்களது தீர்ப்பு, மதமாற்றத்தாலும், பதவிகள் வழங்கலாலும் முறியடிக்கப்பட்டாலும், தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் இருந்து அரசாண்ட மராட்டிய வம்சத்தைச் சேர்ந்த இந்து மன்னர்களால், அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டது. அவர்கள் யாழ்ப்பாண பிரதானிகள் ஒலிவேரா பக்கம் சேர்ந்தவுடன் கண்டிய அரசர்களுக்கு படை உதவி செய்து போர்த்துக்கேயர்களுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாண முன்மாதிரியில் தமிழ்நாட்டில் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை விழுத்துவதற்கு போர்த்துக்கேயரால் முடியவில்லை. அவர்களுடைய மதமாற்றம் கரையோர மீனவக் கிராமங்களிலேயே நின்றுவிட்டது. தஞ்சை, திருச்சி, மதுரை, புதுக்கோட்டை போன்ற நகரங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள விவசாயக் கிராமங்களிலும் பிராமணியக் கட்டுப்பாடுகள் மிக ஆழமாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் பெரிய ஆளுமையுள்ளவர்களாகவும், சமூகத்தைத் தங்கள் பிடியிலிருந்து விலகிச் செல்லாமல் காப்பாற்றி வைத்திருக்கக் கூடியவர்களாகவும் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில், வரலாற்றின் தொடக்க காலத்தில் தமிழர் மதமும், பிற்காலத்தில் தமிழ் பௌத்தமும், சமணமும் ஆளுமை பெற்றிருந்ததே அதற்குக் காரணமாகும். அதைவிட பிராமணர்கள் அநேகமாக தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களாகவே இருந்தார்கள்.

தமிழ்நாட்டு நிலைமை அப்படி இருக்கவில்லை. அங்கு சங்க காலத்திற்கு முன்பே பிராமணியம் வந்து ஆழமாக வேரூன்றி விட்டதாலும் தமிழ்நாட்டு சமூக அமைப்பு அக் காலத்தில் மன்னனையும், நிலப்பிரபுக்களையும், கோவில் நிலத்தையும் சார்ந்தே இயங்கியதாலும் அவற்றை உடைப்பது முடியாத காரியமாக இருந்தது. ஆனால் மீனவக் கிராமங்கள் கடலை சார்ந்து இயங்கியதால் கடலை கட்டுப்பாட்டுக் கொண்டுவந்தவுடன் அந்த சமூக அமைப்பை போர்த்துக்கேயரால் வெல்ல முடிந்தது.

எனவே தமிழ் நாட்டின் உட்பிரதேசங்களுக்குள் ஊடுருவி மதமாற்ற வேலைகள் செய்வதற்கு அவர்கள் ஒரு புதிய தந்திரத்தைக் கையாண்டார்கள். அதாவது, தமது கிறிஸ்தவ தலைமைப் பீடமான வத்திக்கானிலிருந்து ரோமாபுரிப் பிராமணர்களை வரவழைத்தார்கள் (உண்மையில் அவர்கள் பிராமணர்கள் கிடையாது. ஐரோப்பிய இனத்தவர்களான அவர்கள் மேல்தட்டு இந்து மதத்தினரைக் கவருவதற்காக தம்மை ரோம் நகரப் பிராமணர்களாகச் சொல்லிக் கொண்டார்கள்).

**தமிழ்நாட்டின்**
**உட்பிரதேசங்களுக்குள் ஊடுருவி**
**மதமாற்ற வேலைகள் செய்வதற்கு**
**அவர்கள் ஒரு புதிய தந்திரத்தைக்**
**கையாண்டார்கள். அதாவது,**
**தமது கிறிஸ்தவ தலைமைப்**
**பீடமான வத்திக்கானிலிருந்து**
**ரோமாபுரிப் பிராமணர்களை**
**வரவழைத்தார்கள். இவ்வாறு**
**ஒலிவேராவின் காலத்தில்**
**மதுரைக்கு வந்த முதல்**
**வெள்ளைக்கார பிராமணர்,**
**தத்துவபோத ஞான சுவாமி பின்பு**
**வந்தவர் வீரமா**
**முனிவர்**

இவ்வாறு ஒலிவேராவின் காலத்தில் மதுரைக்கு வந்த முதல் வெள்ளைக்காரப் பிராமணர், தத்துவபோத ஞான சுவாமி (Robert de Nobilis) பின்பு வந்தவர் வீரமா முனிவர் (Father Beschi). இந்த இருவரும், மதுரைக்கு வந்ததும் முதல் வேலையாக பூணூல் அணிந்து வேட்டி உடுத்து மிதியடியில் நடந்து சைவ உணவை மட்டுமே உண்டார்கள். அதன் பின் தமிழ் மொழியைக் கற்க ஆரம்பித்தனர். அவர்கள் வந்த நோக்கம் கபடத் தனமானதாக இருந்தாலும், தமிழ் மொழியை கற்க ஆரம்பித்ததும் அவர்களுக்கு அதன் மேல் அபிமானம் ஏற்பட்டது. ஆனாலும் அந்த அபிமானத்தால் தங்களுடைய நோக்கத்துக்கு இடையூறு வராத வகையில் கிறிஸ்தவ மத நூல்களை எல்லாம் தமிழில் மொழி பெயர்த்தார்கள். தமிழ் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் சில மாறுதல்களைச் செய்தார்கள்.

இவர்களது நன்நடத்தையாலும் தமிழ் மொழிக்குச் செய்த சீர்திருத்தம் மற்றும் இவர்களது வாதத் திறமையாலும் தமிழகத்திலுள்ள மேல்தட்டுப் பிரிவினரும் இந்த ரோமாபுரி பிராமணர்களின் வழியில் நடப்பதே சரி என்று கருதி கிறிஸ்தவ மதத்தில் சேர ஆரம்பித்தனர்.

இந்த இருவரில் முன்னவரான தத்துவபோத ஞான சுவாமி யாழ்ப்பாணத்தில் வசித்ததாகவும் இன்றைய ரூபத் தமிழுக்கு (புதினத் தமிழ், நாவல், சிறுகதை, செய்தி) அவரே முன்னோடியாக இருந்தவர் என்றும் ஐதிகக் கதை ஒன்று உள்ளதாக முதலியார் இராஜநாயகம் தனது 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலில் கூறுகிறார். இவர் கி.பி. 1650-ல் இறந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவரது காலத்திலேயே கிறிஸ்தவ தேவாலயங்களுடன் மதக் கல்வி கற்பிக்க பாடசாலைகளும் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப் பாடசாலைகளில் மதப் பிரச்சாரக் கல்வி பிரதானமானதாக இருந்தாலும் தமிழும் போர்த்துக்கேய மொழியும்கூட கற்பிக்கப்பட்டது. சாதாரண பாடசாலைகளில் மதக் கல்வியில் சித்தியடைபவர்கள் பின்பு யாழ்ப்பாணம் சீதாரியில் (பிற்காலத்தில் பறங்கித் தெரு என்று அழைக்கப்பட்டது) உயர் பாடசாலையில் கல்வி கற்க அனுப்பப்பட்டனர். அதிலும் தேர்ச்சி பெறுபவர்கள் போர்த்துக்கேய மொழியில் கல்வி கற்க கோவாவுக்கு அனுப்பப்பட்டனர்.




ஒலிவேராவின் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு 32 கோயில் பற்றுக்களைக (நிர்வாகப் பிரிவாக) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பற்றுக்கும் ஒவ்வொரு கோயில் அமைக்கப்பட்டது.

**வலிகாமம்:**

நல்லூர், சுண்டிக்குளி, வண்ணார்பண்ணை, மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய் என்று பதின்னான்கு பற்றுக்களாகவும்,

**வடமராட்சி:**

பருத்தித்துறை, உடுப்பிட்டி, கட்டைவேலி என மூன்று பற்றுக்களாகவும்

**தென்மராட்சி:**

நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, எழுதுமட்டுவாள் என 5 பற்றுக்களாகவும்

**பச்சிலைப்பள்ளி:**

முகமாலை, புலோப்பளை, தம்பகாமம், முள்ளிப்பற்று என 4 பற்றுக்களாகவும்

**தீவுப் பகுதி:**

காரைதீவு (நகர்), ஊர்காவற்துறை, வேலணை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு என ஆறு பற்றுக்களாகவும் பிரிக்கப்பட்டது.

கி.பி. 1627-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதுவரை இல்லாத அளவில் மிகப் பெரிய புயல் ஒன்று வீசியது. அந்தப் புயலின் உக்கிரத்தால் கடல் பொங்கி எழுந்து கரையோரக் கிராமங்களுக்குள் எல்லாம் புகுந்தது. மக்களது குடிசைகளும், வீடுகளும் இடிந்து தரைமட்டமாகியது மட்டுமல்ல, போர்த்துக்கேயர்கள் கட்டிய கோவில்களும் கூட இடிந்து வீழ்ந்தன. ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்தனர். அம்மை நோயும், வாந்திபேதியும் வேகமாகப் பரவின. உணவுக் களஞ்சியங்களும், விவசாய நிலங்களும் புயலின் உக்கிரத்தால் அழிந்துபோய்விட்டதால் எங்கும் பெரும் பஞ்சம் ஏற்பட்டது.

இந்தப் புயல் மழையால் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணத் தேசாதிபதி பிலிப் து ஒலிவேரா கூட நோய்வாய்ப்பட்டான். 1627-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அதாவது யாழ்ப்பாணத்தில் புயற் காற்று ஊழித் தாண்டவம் ஆடி சரியாக ஒரு மாதத்தில் அவன் தனது நோய் குணமாகாமலே தனது 53வது வயதில் மரணமானான். அவனது உடல் யாழ்ப்பாணத்தில் இருந்த அற்புத மாதா கோயில் வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

அவனுக்குப் பின் லாக்றோட்து செயிக்ஸாஸ் கபிறேரா (Lancrote de Seyxas Cabrera) என்பவன் யாழ்ப்பாணத்தின் போர்த்துக்கேய கப்பித்தன் மேஜரானான்.

இவன் காலத்தில் கண்டி அரசனாக இருந்த செனரத் என்பவன் யாழ்ப்பாண அரசகுமாரியாகிய லியூக்கு குமாரனின் மகளை தன் மகன் மணம் முடித்ததால், யாழ்ப்பாண அரசுரிமை தனக்குரியது என்று கூறி யாழ்ப்பாணத்தின் மீது ஒரு படையெடுப்பை நடத்தினான். இந்தப் படையெடுப்பு கி.பி. 1629-ம் ஆண்டு நடந்து. அத்தப்பத்து முதலியார் எனப்படும் சிங்களவனே 10 ஆயிரம் பேர் கொண்ட இந்தப் படையை தலைமை தாங்கி அழைத்து வந்தான்.

– நக்கீ